


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.2.2025) சென்னை, ஐ.டி.சி கிராண்ட் சோழா ஓட்டலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், CtrlS குழுமம் 4,000 கோடி ரூபாய் முதலீட்டில், 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அம்பத்தூரில் அமைத்துள்ள CtrlS சென்னை தகவல் தரவு மையத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறைச் செயலாளர் வி.அருண்ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, CtrlS குழுமத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஸ்ரீதர் பின்னப்புரெட்டி, நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை

# கடலூர் கிழக்கு மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவோம்!

## மாவட்ட கூட்டத்தில் தீர்மானம் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

கடலூர், பிப்.26-

கடலூர்கிழக்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம், 24.02.2025 திங்கள்கிழமை காலை 11.00 மணியளவில் குறிஞ்சிப் பாடி தி.மு.க. அலுவலகத்தில் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் கீழ்கானும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மார்ச் முதல் நாள் நமது இதயம் நிறைந்த கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்களின் 72வது பிறந்த நாள். அவரின் பிறந்தநாள் உலகத் தமிழர்கள் மகிழ்வுடன் கொண்டாடும் திருநாள். தமிழ் மொழியை பாதுகாத்திட போர்க்களம் பல கண்டு போராடிய போராளி மட்டுமல்ல "உங்களில் ஒருவன்" என அன்பும், பாசமும், நிறைந்த உரிமையுடன் உடன்பிறப்புகளாய், கழகத் தொண்டர்களை அரவணைக்கும் நமது குடும்பத் தலைவர் தளபதியின் பிறந்த நாளை கடலூர் கிழக்கு மாவட்டம் முழுவதும் மாநகரம், ஒன்றியம், நகரம், பகுதி பேரூர், கிளை கழகங்களில் மக்கள் நல்வாழ்வு நலமிகு நாளாக கொண்டாடுவது என்றும் மாணவ, மாணவியர்க்கு, இளைஞர்களுக்கு ஊக்கமாக விளையாட்டு போட்டிகள், தனித்திறன் போட்டிகள் நடத்திடு வது, கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள 395 ஊராட்சிகள், 267 வார்டுகள் ஆகமொத்தம் 662 மரக்கன்றுகள் நடுவது மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குவது என தீர்மானிக்கப்படுகிறது.

**மக்களின் பேராதரவை பெற்ற முதல்வர்!**

இந்தியாவின் முதல்வர்களில் முதல்வராக மக்களின் பேராதரவைப் பெற்று நாளும், பொழுதும் ஓய்வின்றி உழைத்து வரும் திராவிடச்சூரியன் நமது பேரன்புத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் பிப்ரவரி 21 கடலூர் மாவட்டத்திற்கு வருகை தந்து வரலாற்று பதிவு சாதனையாக ரூ 1476 கோடியில் 6,68,000 மக்கள் பயன்பெறும் ரூ479 கோடி மதிப்பிலான குடிநீர் வழங்கும் திட்டம், உட்பட 602



முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்துவைத்து 178 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி 45 ஆயிரம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பித்துள்ளார்கள். நமது மாவட்ட செயலாளர் மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் MRK.பன்னீர்செல்வம் அவர்களின் இணையற்ற உழைப்பையும், செயல்திறனையும் பாராட்டி அனைவரும் பெருமைப்பட வைத்தார். தலைவர் முதல்வர் தளபதிக்கு கடலூர் கிழக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் இதய பூர்வமான நன்றியை இக்கூட்டம் தெரிவித்துக்கொள்கிறது.

செயல்திறன் மிகு கடலூர் கிழக்கு மாவட்ட செயலாளர், வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் MRK.பன்னீர்செல்வம் அவர்களின் ஆணையேற்று தலைவர் முதல்வர் தளபதியின் வருகை மற்றும் நிகழ்வுகள் அனைத்திலும் மக்களின் எழுச்சிமிகு கழகத்தவர்களின் உணர்வுமிகு வரவேற்பினை அளித்து பல்லாயிரக் கணக்கில் மக்களை திரண்டிட உழைத்த மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அவர்களுடன் இணைந்து பணியாற்றிய நிர்வாகிகள், கழக அணியின் பொறுப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக உடன்பிறப்புகள், அனைவருக்கும் இக்கூட்டம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களுடன் செயல்வேகத்துடன் பணியாற்றி முதல்வர் தளபதியின் நிகழ்வுகளை வெற்றிகரமாக நடத்திய மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், அவர்களுடன் பணியாற்றிய அனைத்து அரசு அலுவலர்களுக்கும் இக்கூட்டம் நன்றியை தெரிவிக்கிறது.

தேசிய கல்விக் கொள்கை என்ற பெயரால் மும்மொழித்திட்டம் என்று இந்தி திணிப்பை செய்ய திட்டம் போட்டு செயல்படும் ஒன்றிய அரசை நமது கொள்கைச் சிகரமாக திகழும் நம் முதல்வர் தளபதி அவர்கள் கடுமையாக அறிவுப்பூர்வமாக கண்டித்துள்ளார்.

**கண்டன பொதுக்கூட்டங்கள்!**

கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 20.02.2025 அன்று நடைபெற்ற மாவட்ட, மாநகர, மாநில அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி மும்மொழிக்கொள்கையைத் திணிக்கப்பார்க்கும், நிதிப்பகிர்வில் தமிழ்நாடுக்குப் பாரபட்சம் காட்டும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள காட்டுமன்னார்கோவில், குறிஞ்சிப்பாடி, புவனகிரி, சிதம்பரம், கடலூர் ஆகிய ஐந்து சட்டமன்றத் தொகுதிதோறும் இளைஞர் அணி சார்பில், கண்டனப் பொதுக்கூட்டங்கள், தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் பிறந்தநாள் பொதுக்கூட்டங்கள் நடத்துவது என்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இந்தப் பொதுக்கூட்டங்களில் என் உயிரினும் மேலான கலைஞர் நூற்றாண்டு பேச்சுப்போட்டியின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட இளம் பேச்சாளர்களைக் கொண்டு நடைப்படும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

முதல் மொழிப் போரை முன்னின்று நடத்திய தந்தை பெரியார், இருமொழிக் கொள்கையைக் காத்த பேரறிஞர் அண்ணா, ஓடி வந்த இந்திப் பெண்ணே, நீ நாடி வந்த கோழை நாடு இது வல்ல என்று 13 வயதில் தமிழ்க்கொடி ஏந்திய முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் வழியில், கழகத் தலைவர் தலைமையில், இளைஞர் அணிச் செயலாளர் வழிகாட்டுதலில், ஒன்றிய அரசின் இந்தி திணிப்பு முயற்சியை முறியடித்து, மொழியுரிமையை நிலைநாட்டுவோம் என்று இக்கூட்டம் உறுதியேற்கிறது.

இச்செயற்குழுகூட்டத்தில் கலந்து கொண்டவர்கள்

கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், மாவட்ட துணை செயலாளர்கள் அ.ஞானமுத்து, ஆர்.சக்திவேல், சுதாசம்பத், ஒன்றிய செயலாளர்கள்: காட்டுமன்னார் கோவில் மேற்கு அ.முத்துசாமி, குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றிய வி.சிவக்குமார், குறிஞ்சிப்பாடி வடக்கு ஆர்.நாராயணசாமி, பரங்கிப்பேட்டை வடக்கு முத்து. பெருமாள், குமராட்சி மத்திய ஆர்.ராஜேந்திரன், குமராட்சி கிழக்கு த.சங்கர், குமராட்சி தெற்கு ம.சோழன், குமராட்சி வடக்கு வி. கோவிந்தசாமி, குமராட்சி மேற்கு கே.நடராஜன், கம்மாபுரம் தெற்கு கே.ஆர். ராயர், கம்மாபுரம் மத்திய பி.சுந்தரபாண்டியன், கடலூர் கிழக்கு தெ.காசிராஜன், கடலூர் மேற்கு பி.சுப்பிரமணியன், கடலூர் வடக்கு கே.ஆர்.தனஞ்செயன், கடலூர் தெற்கு ஆர். விஜயசுந்தரம், புவனகிரி கிழக்கு எம்.மனோகரன், புவனகிரி மேற்கு ஏ.எஸ்.மதியழகன், கீரப்பாளையம் கிழக்கு வி.ஜி.பி.சபாநாயகம், கீரப்பாளையம் மேற்கு டி.திருமூர்த்தி, திருமுட்டம் கிழக்கு எஸ்.செந்தில்குமார், திருமுட்டம் மேற்கு கே.ஆர்.கோவிந்தராஜ்,

கடலூர் மாநகர செயலாளர்: கே.எஸ்.ராஜா, கடலூர் பகுதி செயலாளர்கள்: ப.நடராஜன் எஸ்.சலீம், வடலூர் நகர கழக செயலாளர் த.தமிழ்ச்செல்வன், வடலூர் நகரமன்றத் தலைவர் எஸ். சிவக்குமார்,

தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வ.ஞானசேகரன், வே.விக்கிரமன், பொதுக்குழு உறுப்பினர்கள்: கே.பி.ஆர்.பாலமுருகன், ச.கல்யாணசுந்தரம், விபி.பாலு, மு.வெற்றிவேல், என்டி.கணேசன், பா. கோதண்டபாணி,

பேரூர் செயலாளர்கள்: காட்டுமன்னார்கோவில் எஸ்.கணேசமூர்த்தி, குறிஞ்சிப்பாடி கு.வே.ப. ஜெய்சங்கர், திருமுட்டம் பூ.செல்வகுமார், அண்ணாமலை நகர் க.பழனி, லால்பேட்டை பேரூர் எம்.அன்வர்சதாத், பரங்கிபேட்டை பேரூராட்சி மன்றத் தேன்மொழி சங்கர், மாவட்ட கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்: இளைஞரணி ஜி.கார்த்திகேயன், மாணவரணி அமைப்பாளர் அப்புசந்திய நாராயணன், மகளிர் அணி த.அமுதராணி, மகளிர் தொண்டரணி எஸ்.மனோரஞ்சிதம், வழக்கறிஞரணி பி,அருள்ஜோதி, விவசாய அணி தலைவர் வைத்தியநாதன், அமைப்பாளர் பொ.பன்னீர்செல்வம், விவசாய தொழிலாளர் அணி ம.ராமசாமி, தொண்டர் அணி ஆராஅமுது, ஆதிதிராவிடர் நலக்குழு அணி ஆர். பரந்தாமன், வர்தகர் அணி ஆர்.ரெங்கநாதன், அமைப்பு சாரா ஓட்டுனர் அணி தாணூர் சிவக்கொழுந்து, பொறியாளர் அணி அப்பு. சந்திரசேகர், சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு எம்எஸ்.முகமது யூனூஸ், தொழிலாளர் அணி கி.தண்டபாணி, மீனவர் அணி வீ.செல்வபாரதி, விளையாட்டு மேம்பாட்டு அணி பூ.சதீஷ்குமார், அயலக அணி வாசு(எ)விசுவராஜ், மருத்துவ அணி தொகுதி அமைப்பாளர் டாக்டர் கலைக்கோவன்,

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஏஎம்.மதியழகன், க. முத்துக்குமார், குட்டிமணி, கே.மணிகண்டன், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் ஜெயமணி, துணை அமைப்பாளர்கள் உமாபதி, ஜெயச்சந்திரன், குப்புராஜ், கோபி, சரத் மற்றும்

தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர்கள் மு.வெற்றிச்செல்வன், பி.கௌதம், ப.பிரவின், ராகவன், உமாபாலன், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.




கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் முதற்கட்டமாக 1000 மருந்தகங்களை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து, வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி விழுப்புரம், கூட்டுறவுத்துறை சார்பில், கோலியனூர் ஒன்றியம், சாலை அகரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள முதல்வர் மருந்தகத்தை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார். மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான், விழுப்புரம் மத்திய மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ, விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், ஒன்றிய கழக செயலாளர் தெய்வசிகாமணி, ஒன்றிய குழு பெருந்தலைவர் சச்சிதானந்தம், மாவட்ட கவுன்சிலர்கள் இரா.கேசவன், ஹரி ராமன், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் ஷீலா தேவி சேரன், அவைத் தலைவர் வழக்கறிஞர் இரா.கண்ணப்பன், வளவனூர் பேரூராட்சி செயலாளர் பா.ஜீவா, பொதுக்குழு உறுப்பினர் சம்பத், ஒன்றிய கவுன்சிலர்கள் சாலை சந்திரசேகர், இன்பசேகர், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி தலைவர் நடராஜன், மாவட்ட மருத்துவர் அணி தலைவர் செந்தில், மாவட்ட சிறுபான்மையணி தாகிர், நகர இளைஞரணி அமைப்பாளர் மணிகண்டன் ஒன்றிய துணை செயலாளர்கள் ஜெயந்தி ராஜகணேஷ், ராஜசேகர், கிளைச் செயலாளர்கள் குணசேகரன், அசோக் குமார் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.02.2025) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் சென்னை, கோபாலபுரத்தில் 8 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 'கலைஞர் நூற்றாண்டு குத்துச்சண்டை அகாடமி' கட்டடத்தை திறந்து வைத்து, அங்கு நடைபெற்ற குத்துச்சண்டை போட்டியில் வெற்றி பெற்ற குத்துச்சண்டை வீராங்கனைக்கு கோப்பையை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் மரு. நா. எழிலன் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### திருவண்ணாமலை மத்திய தபால் நிலையம் எதிரில்

# இந்தித் திணிப்பை எதிர்த்து ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆர்ப்பாட்டம்!

## பேரணியாய் திரண்டு வந்து கண்டன முழக்கங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தினர்!

திருவண்ணாமலை, பிப்.26-

இந்தியை திணித்திடும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து, திருவண்ணாமலையில் அனைத்து மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு மற்றும் தி.மு.க. மாணவர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. 5000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பேரணியை திரண்டு வந்து மத்திய அஞ்சல் நிலையம் எதிரில் கண்டன முழக்கங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாட்டின் கல்வி கட்டமைப்பை சிதைக்கும் உள்நோக்கத்துடனும், ஆதிக்க இந்தியை திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்தும், மாணவர் இயங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் ஒன்றிய பாஜக அரசை கண்டித்து தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள முக்கிய நகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. அதனை முன்னிட்டு...

25.02.2025 செவ்வாய்க்கிழமை காலை 9.30மணிக்கு இந்தியை திணித்திடும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து, திருவண்ணாமலையில் அனைத்து மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு மற்றும் தி.மு.க. மாணவர் அணி சார்பில் மாபெரும் கண்டன பேரணி மற்றும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கண்டன பேரணிக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் காலேஜ் கு. ரவி தலைமை வகித்தார்.

திராவிடர் கழக மாணவர் அணி மாவட்ட தலைவர் ராஜா, ம.தி.மு.க. மாணவர் அணி தலைவர் ஏ.வி. கே.பாலாஜி, இந்திய மாணவர் சங்க மாவட்ட செயலாளர் கோபி, விடுதலை சிறுத்தைகள் கட்சி, புரட்சி மாணவர் முன்னணி மாவட்ட செயலாளர் தமிழ்செல்வம், முற்போக்கு மாணவர் கழகம் கோ. ரமேஷ், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் மு.க.கௌதமன், இரா.மின்னல் கமல், மாதேஷ், கல்லூரி மாணவர் ஒருங்கிணைப்பாளர் அ.பரணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாணவர் இயங்களின் கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள மாணவர் அமைப்புகளின் நிர்வாகிகள், தமிழ் மாணவர் மன்ற நிர்வாகிகள், திமுக மாணவர் அணி நிர்வாகிகள் மற்றும் கல்லூரி மாணவர்கள் 5000க்கும் மேற்பட்டோர் பேரணியாய் திரண்டு,

காமராஜர் சிலை, திருமஞ்சன கோபுரத் தெரு, கற்பக விநாயகர் கோயில், திருவூடல் தெரு, கடலைக்கடை சந்திப்பு, தேரடி வீதி, காந்தி சிலை வழியாக கொசமடத் தெரு, கிருஷ்ணன் தெரு, பெரியார் சிலை வழியாக நடைபெற்ற பேரணி, அம்பேத்கர் சிலை அருகில் உள்ள மத்திய அஞ்சல் நிலையம் எதிரில் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில்...

திணிக்காதே திணிக்காதே இந்தியை திணிக்காதே,

மிரட்டாதே மிரட்டாதே மாநில அரசுகளை மிரட்டாதே,

ஏற்கமாட்டோம் ஏற்கமாட்டோம் மும்மொழியைக் கொள்கையை ஏற்கமாட்டோம்,

விடுவித்திடு விடுவித்திடு தமிழக மாணவர்களின் கல்வி நிதியை விடுவித்திடு,

திருப்பி கொடு திருப்பி கொடு கல்வியை மாநில பட்டியலுக்கு திருப்பி கொடு,

திருப்பி கொடு திருப்பி கொடு எங்கள் வரிப் பணத்தை திருப்பி கொடு என்று,

5000க்கும் மேற்பட்ட மாணவர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நிறைவாக கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாணவர்கள் கூட்டமைப்பின் நிர்வாகிகள் உரை நிகழ்த்தினர். அவர்கள் ஆற்றிய உரையில் மீண்டும் ஒரு மொழிப்போராட்டம் தொடங்கிவிட்டது. ஒன்றிய அரசிற்கு கடந்தகால தமிழகத்தின் வீரம் செறிந்த மொழிப்போராட்டத்தை நினைவுபடுத்த விரும்புகிறோம், தமிழகம் எப்பொழுதும் மும்மொழிக் கொள்கையை ஏற்காது, இங்கே இந்திக்கு இடமில்லை, ஒன்றிய அரசே கல்வியை வைத்து அரசியல் செய்யாதே என்று உரை நிகழ்த்தினர்.






கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பாக மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆலோசனையின் பேரில் மேலூரில் மாணவர் அணி அமைப்பாளர் ஆதிசங்கர் தலைமையில் கழக நிர்வாகிகள் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., ஜி.பி.ராஜா, எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியம், தனச்செல்வம், சிறைச்செல்வன், ரேணுகா ஈஸ்வரி, வக்கீல் கலாநிதி, முகமது யாசின், செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் இந்தி எழுத்துக்களை அளித்தும் ஒன்றிய அரசைக் கண்டித்தும் கோஷங்களை எழுப்பியும் கண்டனங்களை பதிவு செய்தனர். மேலும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கழக நிர்வாகிகள் இளங்கோவன், சசிக்குமார், மருது பாண்டியன், பாண்டியராஜன், கௌரிசங்கர், அன்பழகன், மதிவெங்கடேஷ், சுதன், காவேரி, தவமணி, சம்மட்டிபுரம் கணேசன், பொதும்பு தனசேகர், பசும்பொன்மாறன், கிருஷ்ணமூர்த்தி, பிரபு, ராஜராஜன், கதிரவன், கேசவன், சரவணன், அபிதா, அரிச்சந்தர், அய்யப்பன், பரவை அன்புச்செல்வன் மற்றும் திரளான மாணவர்கள், மாணவ அமைப்பினர், கழகத்தினர், பொதுமக்கள் பங்கேற்றார்கள்.